
# 31ஆம் நாள் நினைவில்...

என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
என் மரணத்திலும் எனக்காக மன்றாடுங்கள்



இளவாலை மேற்கு இளவாலையைப் பிறப்பிடமாகவும்,

வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த

## அமரர் சூசைப்பிள்ளை திரேசம்மா

அவர்களது விண்ணக வாழ்வின்

## 31ஆம் நாள் நினைவு மலர்

## 31.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இறை ஆசீர் நிறைந்திட்ட
இளவாலை ஊர்தனிலே
சீரோடும் சிறப்போடும்
ஊர் போற்ற வாழ்ந்து அன்பான அன்னையாகி
அவனியில் எமை ஆளாக்கி
கண்ணின் மணியாக
கருத்தோடு எமைக்காத்து
எம் வாழ்க்கைப் பாதைக்கு
என்றென்றும் ஒளியான
எம் குடும்பச் சுடர் விளக்கே
எம் பாசமிகு அம்மாவே
இறைவனடி உமது ஆன்மா
இளைப்பாற வேண்டுகின்றோம்
அஞ்சலி மலர் இதனை
அர்ப்பணிக்கின்றோம் உம்பதம்

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
1928.02.18

விண்ணில்
2013.05.31

அமரர்

# சூசைப்பிள்ளை திரேசம்மா

அவர்களின்

விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடல் 91

1 உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர்,
எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர்.

2 ஆண்டவரை நோக்கி, 'நீரே என் புகலிடம்; என் அரண்; நான்
நம்பியிருக்கும் இறைவன்' என்று உரைப்பார்.

3 ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும்
கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்.

4 அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார்; அவர்தம் இறக்கைகளின்
கீழ் நீர் புகலிடம் காண்பீர்; அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும்.

5 இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர்.

6 இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய
வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர்.

7 உம் பக்கம் ஆயிரம்பேர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர்
தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது.

8 பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர்; உம்
கண்ணாலேயே நீர் காண்பீர்.

9 ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர்; உன்னதரை உம்
உறைவிடமாக்கிக் கொண்டீர்.

10 ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது; வாதை உம் கூடாரத்தை நெருங்காது.

11 நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர்
கட்டளையிடுவார்.

12 உம் கால் கல்லின்மேல் மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில்
உம்மைத் தாங்கிக்கொள்வர்.

13 சிங்கத்தின் மீதும் பாம்பின் மீதும் நீர் நடந்து செல்வீர்; இளஞ்சிங்கத்தின்
மீதும் விரியன்பாம்பின் மீதும் நீர் மிதித்துச் செல்வீர்.

14 'அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன்; அவர்கள்
என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்.

15 அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது, அவர்களுக்குப்
பதிலளிப்பேன்; அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்;
அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்.

16 நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்; என் மீட்பை
அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.'


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரித்த விசுவாசிகளுக்காக வேண்டுதல்

சகல விசுவாசிகளையும் சிருஷ்டித்து இரட்சிக்கிறவரான சருவேசுரா! இந்த உலக சீவியத்தை விட்டுப் போயிருக்கிற உமது அடியாருடைய ஆத்துமங்களுக்கு பூரண பாவப்பொறுத்தலைக் கொடுத்தருளும். நாங்கள் செய்கின்ற பக்தியான மன்றாட்டங்களினாலே இந்த ஆத்துமாக்கள் தாங்கள் எப்போதும் ஆவலோடே தேடின பாவப்பொறுத்தலை அடைந்துகொள்ளும்படி கிருபை செய்யும்படி சதாகாலமும் சீவியருமாய், இராட்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே! ஆமென்.

## உத்தரிப்பு ஆத்துமாக்கள் மீட்கப்படவும் பாவிகளுக்கு இறைஇரக்கம் கிடைக்கவும் செபம்

என்றும் வாழும் தந்தாய்! உமது தெய்வ மகனாகிய இயேசுவின் விலைமதிப்பற்ற திரு உதிரத்தை, இன்று உலகெங்கிலும் செலுத்தப்படும் திருப்பலியோடு ஒன்றித்து உத்தரிக்கும் ஆன்மாக்கள் அனைவருக்காகவும், உலகெங்குமுள்ள பாவிகளுக்காகவும், அகில திருச்சபையிலுள்ள பாவிகளுக்காகவும் எனது இல்லத்திலும் குடும்பத்திலுமுள்ள பாவிகளுக்காகவும் உமக்கு அர்ப்பணிக்கின்றேன். ஆமென்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடன் பிறந்தாரின் உள்ளக்குமுறல்..

அக்கா!
எம் குடும்பத்தின் குலவிளக்கே
எம் தாயின் தலைமகளே
எம் வாழ்வு தழைத்தோங்க
கரம் கொடுத்த சோதரியே
அக்கா என அழைத்து
அருகிருக்க முடியாமல்
அயல் நாட்டிலும் இங்கும்
ஆற்றுவாரின்றி நாமிருக்க
ஆண்டவன் அடியில் – நீ
அமைதியில் துயில் கொண்டாயே
எம் ஆருயிரே!
எங்கிருந்த போதும் உம்மை
மறவாமல் – உம்
ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவரிடம் வேண்டிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கண்ணீர்..

அம்மா என்று நாம் அழைக்க
இன்று நீங்கள் இல்லை
அம்மா உங்கள் அரவணைப்பு
இனி எமக்கு இல்லை
இதை எண்ணிப் பார்க்கையிலே
உள்ளம் கலங்குதம்மா – நீங்கள்
இல்லாத எம்வாழ்வு
இருண்டே போனதம்மா
ஈரைந்து மாதங்கள் எமைச் சுமந்து
கண்டீர்கள் பலதுன்பம் அம்மா
பாசமுடன் எங்கள் அறுவருக்கும்
பாலூட்டி சீராட்டி தாலாட்டி
பாரினில் நாம் உயர்ந்திட
உம் தியாகங்கள் பலநூறு தாயே
அன்பையும் பண்பையும்
அள்ளி அள்ளி எமக்களித்தீர்
இனிதாய் வழிநடத்திட்டீர்
தந்தையின் பிரிவினால் தளர்ந்திடாது
தாங்கினீர்கள் தனயர் எமை
பிள்ளைகள் நாம் இளைப்பாற
பெருவிருட்சம் ஆனீர்கள்
தவிக்கின்றோம் இங்கு நாம்
தாயே எமைவிட்டுப் போனதென்ன
பிள்ளைகள் எம் பெருமைதனை
பிதாவிடம் சொல்லச் சென்றீர்களோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுடன் நீங்கள் ஊட்டிய
பாற்சோறின் சுவை மறவோம்
பரமனடி சேர்ந்திட முன் நீங்கள்
பட்ட துயரும் நாம் மறவோம்
பொலிவு நிறை முழு நிலவாய்
ஒளி வீசிய உங்கள் தோற்றம்
பொலிவிழந்து சருகான
பொல்லாத காட்சியது மனதினில் அகலாதே
அம்மா நீங்கள் எம்மோடு
வாழ்ந்திட்ட ஒவ்வொரு நொடிப்பொழுதும்
எண்ணிப்பார்க்கின்றோம்
ஏங்கி நாம் அழுகின்றோம்
என்செய்வோம் தாயே
எப்படி அமைதிகொள்வோம்
என்றும் உங்கள் நினைவுகள்
தந்திடும் கண்ணீர்த்துளிகளுடன்
அம்மா உங்களதும் ஐயாவினதும்
ஆன்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகளின் இதயக் குமுறல்..

அம்மா நான் அழுகின்றேன் – என் பிள்ளைகளும் தினம் தேம்புகின்றனர் உங்களை நினைத்து. மகனாய் உங்களைப் பராமரித்து உங்கள் மருமகனும் மனம் கலங்குகின்றார். உங்கள் கடைசிப்பிள்ளை என்னோடு கடைசிவரை இருந்தீர்களே. இப்போது தனியே தவிக்கவிட்டுப் போனதென்ன? உங்கள் குழந்தை நான் உங்களை என் குழந்தையாகக் காத்தேனே, நான் தனியே இருப்பேன் என எனக்குத் துணையாய் இருந்தீர்களே. மாலை நேரம் ஆனதுமே மருமகனும் பேரப்பிள்ளைகளும் வந்துவிட்டார்களா எனத் தேடுவீர்களே, இனி யார் எம்மைத் தேடுவார்? யார் எமக்குத் துணைநிற்பார்?

முதுமையின் பிடியில் நீங்கள் தள்ளாடிய போதும், இடையிடையே நீங்கள் நோயுற்று வருந்திய போதும் கண்ணாக உங்களைக் காத்தேனே அம்மா, கரம் தந்தார் என் துணைவர், காலடியில் நின்றனர் என் பிள்ளைகள். எங்களுக்கு சோறூட்டிச் சீராட்டி வளர்த்திட்ட அம்மம்மா என்று சொல்லி உங்களுக்கு உணவூட்டி மகிழ்ந்ததைக் கண்டு மகிழ்ந்தீர்களே, இன்று எப்படி மனம் வந்தது எமை விட்டுப் போவதற்கு? குளிப்பாட்டி, குளிர்போக்கி, உடைமாற்றி, உணவூட்டினேனே. உதரத்தில் சுமந்து உங்கள் உதிரத்தை உணவாக்கி ஆளாக்கிய அன்பிற்கு ஈடாகுமோ அம்மா?

எத்தனை அழகாய் இருந்தீர்களம்மா; முதுமையின் பிடியினால் பின்னர் உங்களைத் தூக்கி அணைக்கக்கூட முடியாது உடல் தேய்ந்தீர்களே. அதை எண்ணிப்பார்க்கையில் ஏங்குதம்மா என்னுள்ளம். கட்டுப்போடுகையில் உங்கள் காயங்களுக்கு கதறி நான் அழுதிட்ட நாட்கள் பல அம்மா. நீர் பருகிடவும், உணவு உண்டிடவும், ஏன் சரியாகப்படுத்துறங்கவும் முடியாது நீங்கள் பட்ட கஷ்டம் இன்னும் என் மனதை உருக்குதம்மா. நான் கவலைப்படுவேன் என்பதற்காய் "ஒன்றுமில்லை எனக்கு" என்று சொல்லுவீர்களே, என் மீது நீங்கள் கொண்ட அன்பையும் அக்கறையையும் இனி எங்கே நான் காண்பேன்? அம்மா! ஆறாது எந்தன் மனம், துயர் மாறிடாது என் பிள்ளைகளுக்கு, கவலை மறையாது என் துணைவருக்கு.

என்றும் உங்கள் நினைவுடன் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம். உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றி அடைந்திட எம் ஜெப மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் உள்ளத்துயர்..

இருண்டதே எம் வானம்
சுருண்டதே உம் தேகம்
அடங்கியதே உம் கனிவான பேச்சு
முடங்கியதே உம் இனிதான நடத்தை

மாமி என்றழைக்க மனம் இன்றி
அம்மா என்றழைத்து மனம் தேற
எந்நாளும் ஓடி வந்தோமே
அன்பின் இலக்கணமே
பண்பின் பேரொளியே
பார்ப்போர் மனம் மகிழ்ந்திட
பரிவுடன் நடந்த பாச உறவே
பகலும் இரவும் இறைவனோடு
செபத்தில் ஒன்றித்திருக்கும் உள்ளமே
மரணத்தை மரணிக்க வைக்க
முடியாத மரங்கள் நாம்
இங்கிருந்து புலம்ப எல்லோர்க்கும்
நல்ல தாயாய் நடந்த உங்களைக்
காலனவன் தேடி வந்தான்

அரவணைக்கும் அன்னையே
திரேசம்மா என்னும் நாமத்திற்குரிய நற்தாயே
மறக்க முனைகின்றோம் முடியவில்லையே
உங்கள் பிரிவு எமக்கு
ஈடுசெய்ய முடியாத இழப்பம்மா
உங்கள் பண்பான நடத்தை வாழ்நாளில்
மறக்க முடியாத துயரம்மா
உங்கள் பாசம் மட்டும் எம்
நெஞ்சங்களில் நினைவுகளாய்ப் பதிய
பிரார்த்திக்கின்றோம் உம் ஆத்மா சாந்தியடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கும் விழிகளுடன் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும்..

**பகலவன் மறைந்து நிலவுதன் ஒளி தந்திட்ட – அந்த**
**இரவு வேளை உம்பிரிவு செய்திகேட்டு இழந்திட்டோம் நாம்**
**அம்மம்மா, அப்பம்மா, பாட்டி என அன்பாக உமை இனி**
**எப்போது அழைப்பதென ஏங்குகிறோம் உம் பேரர்கள் நாம்**

உங்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆக நாம் என்ன தவம் செய்தோம்? உங்கள் பிள்ளைகளை அன்பாக வழிநடத்தியதைப் போல உங்கள் பேரப்பிள்ளைகள் எம்மையும் அன்பு மொழி பேசி, நற்பழக்கவழக்கங்களுடன், நல் ஆன்மீக வழியிலும் நெறிப்படுத்தினீர்களே. உங்கள் அன்பான சின்னஞ்சிறு பூட்டப்பிள்ளைகளையும் அரவணைத்து முத்தமிடும் பாக்கியம் கண்டு காலனவன் பொறாமை கொண்டானோ? செல்லமாக எம்பெயரை நீங்கள் உச்சரிக்கையில் பேரானந்தமடைந்தோமே! இன்று உம்குரல் கேட்க எங்கு நாம் செல்வோமம்மா?

பேரப்பிள்ளைகள் எம் கல்வி சிறப்புற எப்போதும் உங்கள் செபங்களில் எம்மை இணைப்பீர்களே. பரீட்சை எழுதப்போகும் வேளை உங்கள் ஆசீருக்காய் நாம் வரும்போது "நான் உங்களுக்காக கடவுளிடம் வேண்டுகிறேன், தைரியமாகச் செல்லுங்கள்" என எமைத் தட்டிக்கொடுத்து வழியனுப்புவீர்களே. உங்கள் செபங்களின் வலிமைதனை நாம் இப்போதிருக்கும் உயர்நிலை கண்டு உணர்கின்றோம் தாயே. உமக்குக் கைம்மாறு நாம் என்ன செய்வோம்?

உமைப்பார்க்க வரும்போதெல்லாம் நொறுக்குத் தீனிகளுடன் உங்கள் பாசத்தையும் சேர்த்து ஊட்டுவீர்களே. உங்கள் இறுதி நாட்களில் உங்களுக்கு உணவூட்டிவிடக்கூட முடிந்திடவில்லையே எம்மால்!

உடல் நலம் சரியில்லையென்றாலும் மெதுவாக நடந்து திருப்பலிக்கு வருவீர்களே! நீங்கள் அமரும் நாற்காலி உங்கள் வரவை எதிர்பார்த்திருக்க நீங்கள் உயிரற்ற உடலாய் சுமந்துவரப்பட்டதை அது எப்படித் தாங்கிற்றோ?

உங்கள் இழப்பு பொய்யாகிடாதோ எனும் அற்ப ஆசையில் உங்கள் இறுதிச் சடங்கில் கண்ணீர்த்துளிகளுக்குக் கூட எம் மனங்கள் இடமளிக்கவில்லை. அறிவுக்கெட்டிய உங்கள் இழப்பு எம் மனங்களுக்கு எட்டவில்லை தாயே.

உங்கள் வரவுக்காய் இன்றும் ஆவலுடன் காத்திருக்கிறோம் நாம் ஏங்கிய விழிகளில் தேங்கிய நீருடன்..

உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற என்றும் உங்களுக்காக எமது செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 18 | | 31 |
| 02 | | 05 |
| 1928 | | 2013 |



## சூசைப்பிள்ளை திரேசம்மா

இதயம் விம்மியழ இன்றைய
பொழுது விடிந்ததம்மா – எம்
குல விளக்கு நீங்கள் அணைந்ததால்
வாழ்வே இருண்டதம்மா..
அன்பான தந்தையை இழந்த
முப்பது ஆண்டுகளாய்
தந்தையுமானீர்களே தாயே
தனயர் எங்களுக்கு – இன்று
எமை மறந்ததென்ன அம்மா
கலங்கவிட்டது ஏனோ?

பாலூட்டிச் சீராட்டி அன்பாய்
பாரினிலே உத்தமராய் எமை மாற்றி
பேரப்பிள்ளைகளோடு பூட்டப்பிள்ளைகளையும்
பேராசையோடு அள்ளி அணைத்து – இன்று
போதும் என்ற நிறைவோடு
புறப்பட்டீர்களோ அம்மா?
நீங்கள் இல்லா எம் வாழ்வு
நிறைவற்றுப்போனதம்மா..

முழு நிலவாய் எம் வானில்
ஒளி வீசிய நீங்கள்
தேய்பிறையாய் தேய்ந்திட்ட
உம் இறுதி நாட்கள் அவை
எம் மனத்திரையில் அம்மா
என்றுமே அகன்றிடாது..

அம்மா, மாமி, அம்மம்மா,
அப்பம்மா, பாட்டி என
நீங்கள் தந்த அன்பை
இனி எங்கே நாம் பெறுவோம்?
ஏங்குகின்றோம் கலங்குகின்றோம்
எப்படி அமைதி அடைவோம்?
தந்தையிடம்தான் சென்றீர்கள் என
தைரியம் அடைகின்றோம்..
இறை தந்தையில் அமைதி பெறுவீர்கள் என
இதயமதை தேற்றுகின்றோம்..

எம் கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்
எல்லாம் வல்ல தேவன் சந்நிதியில் இளைப்பாற..

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 31 |
| 02 | 05 |
| 1928 | 2013 |

## சூசைப்பிள்ளை திரேசம்மா

எம்மவர் தந்தையின் துணைவியாய்
எம் உள்ளங்களில் நிலைத்திட்ட தாயே
உந்தன் மறைவுச் சேதியால்
உள்ளம் கலங்குகின்றோம்.
தந்தை பணி தொடரும்
நற்தனயரைப் பெற்றெடுத்தீர்
நாடி வந்தோர்க்கு
நல்ல உறவானீர்
"மாஸ்ரர் அம்மா" என உமை
அன்போடு அழைப்போம்
இதயம் விம்முகின்றோம் - நீங்கள்
இளைப்பாற இறைவன் பதம்
இறைஞ்சியே நிற்கின்றோம்

எமது சங்கப் பொருளாளர் திரு. சூ. றோபேட் உதயகுமார் அவர்களின் தாயார் சூசைப்பிள்ளை திரேசம்மா அவர்களின் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

புனித யூதாததேயு வாழ்வாதாரச் சங்கம்,
சென். யூட்,
இளவாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




மண்ணில்: 18 - 02 - 1928

விண்ணில்: 31 - 05 - 2013

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தின் யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் முன்னாள் அதிபரும்
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் அதிபருமாகிய
திரு. சூ. நோபேட் உதயகுமார் அவர்களின் பாசமிகு தாயார்

# அமரர். சூசைப்பிள்ளை திரேசம்மா

**காற்றினில் கலந்தொரு சேதி வந்தது**
**காவி வந்த காற்றும் நொந்தது**
**ஆற்று நீரென விழி சுரந்தது**
**ஆவி சோகத்துடன் துயர் பறந்தது**
**தேற்றத்தெரிந்திடா எம்மனம் உறைந்தது**
**திண்ணம் கொண்டு தன்செயல் முடித்தவர்**
**எண்ணம் என்றும் ஏற்றமாய்க் கொண்டவர்**
**ஏறும் புகழிலும் எளிமை கொண்டவர்**
**நல்லெண்ணம் கொண்டு ஏற்றமாய் வாழ்ந்தவர்**



அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்**
**(அதிபர்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திரு.சூ.றோபேட் உதயகுமார்
அவர்களின் அன்புத் தாயார்



மலர்வு
18 . 02 . 1928

உதிர்வு
31 . 05 . 2013

புன்னகைக்கு விலையின்றி – சிரித்த
முகத்துடன் அன்பு செலுத்தும் தங்கள்
செய்கை எங்கு தானோ
மண்ணிற் பிறந்த மாந்தரெல்லாம்
மண்ணிலே மறைகின்றபோது
மனிதர் மறவா தாயாக மறைந்து சென்றாய்
படைத்தவர் அன்பு கொண்டு பறித்திட்டான்
நாம் பதைக்கின்றோம் உம்மை எண்ணி

மலர்ந்த முகமும் மறையாத பண்பும்
கவர்ந்த வரவேற்பும் கருணை உள்ளமும்
கடமையில் கண்ணியமாய்
கண்களிற் காட்சியாய் கதை கூறி நிற்க
கணப்பொழுதில் தம் கரம் எடுத்தாரோ கடவுள்
நினைத்துப் பார்க்கின்றோம் நெஞ்சம் ஒரு
கணமும் பொறுக்குதில்லை தாயே!

## அமரர்.ஆசைப்பிள்ளை திரேசம்மா

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்ஆத்மா சாந்தியடைய
ஆண்டவரைப் பிரர்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவ சங்கத்தினர்.


சாய்ராம் பிரிண்டேர்ஸ், சங்கானை.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

எமது அயற் பாடசாலையான யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திரு.சூ.ரொபேட் உதயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

# அமரர்.சூசைப்பிள்ளை திரேசம்மா



திருமதி.சூசைப்பிள்ளை திரேசம்மா அவர்களின் மறைவு குறித்த செய்தி அறிந்து துயரடைகின்றோம். நல்ல அன்னையாய் எல்லோரும் போற்றும் வகையில் சிறப்பான இல்வாழ்வுடன் மக்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்த அன்னைக்கு எமது கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம். ஆத்மா சாந்திக்காக அக உணர்வுடன் பிரார்த்தனை செய்கின்றோம். இவரின் பிரிவால் துயருறும் உறவுகளுடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

தோற்றம்
18.02.1928

மறைவு
31.05.2013

அன்னாரின் பிரிவால் துயருறும்
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கம்,
யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை,
சங்கானை.

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்



தோற்றம்
18.02.1928

மறைவு
31.05.2013

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு.சூசைப்பிள்ளை நோபேட் உதயகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர். சூசைப்பிள்ளை திரேசம்மா

பல்லாண்டு காலம் நல்வாழ்க்கை வாழ்ந்து
பக்குவமாய்க் குடும்பத்தைப் பண்போடு காத்து
பாரினில் முன்னுதாரணமாய் வழிகாட்டிய
பாசத்தின் ஒளி விளக்கே – உன்னை
காண்பது இனி எப்போது.
புன்சிரிப்பால் கவர்ந்திடுவாய்
நன்மைகள் நிறைவேற்றிடுவாய்
நட்பினால் நடத்திடுவாய்
இன்சொல்லால் பேசிடுவாய்
இடையில் சென்று விட்டாய் – எம்மை
சோகத்தில் மூழ்க வைத்து.
மண்ணில் வாழ்வை முடித்து
விண்ணகம் சென்ற தாயே
உன் ஆன்மா இறைவனில் சாந்தியுற
மண்ணில் நாம் மன்றாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

01.06..2013

சாயிராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிப்பது எப்படி?
## படிப்பதை நினைவில் நிறுத்துவது எப்படி?
## தேர்வுகளில் வெற்றி பெறுவது எப்படி?

மாணவர்கள் தேர்வு நடக்கும் காலங்களில் வழக்கத்திற்கு மாறான மனநிலையில் இருப்பார்கள். எப்போதையும் விட அதிக மன இறுக்கம், குறைவான தூக்கம், அதிக நேரம் படிப்பு என்று ஒருவித போராட்ட சூழ்நிலையில் பதட்டத்தோடு காணப்படுவார்கள்.

**உண்ணக்கூடாதது :**

இப்படி குறைவான தூக்கம், கூடுதலான மன இறுக்கம் இவை உடலில் செரிமானத் தன்மையை பாதிக்கிறது. எனவே இது போன்ற வேளைகளில் கடினமான உணவுகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. அதிக உணவை, கடின உணவை உண்ணும் போது வயிற்றுக்கு அதிக இரத்தம் பாய்வதால் மூளையின் செயல்திறன் பாதிப்படைகிறது. எனவே, எண்ணெய் பதார்த்தங்களையும், காரம், மசாலாக்கள் நிறைந்த உணவுகளையும் தவிர்க்கவேண்டும். குறிப்பாக நிலக்கடலை உண்பதைத் தவிர்க்க வேண்டும். அதிக தாகத்தை உருவாக்கும் இட்லி, தோசைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். அதிக புளிப்பு உள்ள தயிர் தவிர்க்கப்பட வேண்டும்.

**எடுத்துக்கொள்ள வேண்டியவை :**

காலையில் சாத்துக்குடி, ஆரஞ்சு, திராட்சை, தர்பூசணி இவற்றின் சாறுகளில் தேன் கலந்து குடிக்கலாம். அதன்பின் சத்துமாவு, கஞ்சி, ஓட்ஸ், கம்பு, ராகி, கோதுமை, அரிசி இவற்றில் ஏதாவது ஒன்றின் கஞ்சியை அருந்தலாம். மதியம் பருப்பு, கீரை இவற்றை வேகவைத்து கடைந்து சாதத்துடன் சேர்த்து உண்ணலாம். இரவுவேளைகளில் வாழைப்பழம், பப்பாளிப்பழம், ஆப்பிள்பழம் ஆகியவற்றின் கலவையை (சாலட்) உண்ணலாம். படிக்கும் வேளைகளில் தேவைப்பட்டால் உலர் திராட்சை எடுத்துக்கொள்ளலாம். பேரீச்சம்பழம், பாதாம் பருப்பின் பொடியும் கலந்து உண்ணலாம். இவைகள் எளிதாக செரிமானம் ஆகும். அதே வேளையில் மூளைக்கு வேண்டிய சத்துக்களைக் கொடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதட்டம் குறைய :**

தேர்வு வேளைகளில் ஒருவித பதட்டமும், பயமும் மனதிலிருக்கும். இதைக் குறைக்கவும், மனம் அமைதியாக செயல்படவும், நரம்பு மண்டலங்கள் சிறப்பாக இயங்கவும், மூளைக்கு தேவையான ஒட்சிசன் கிடைக்கவும் தினமும் யோகாசனப் பயிற்சிகளைச் செய்யலாம். ஒரு மணி நேரம் தொடர்ச்சியாகப் படித்தப்பின் ஐந்து நிமிட இடைவேளை எடுத்துக்கொண்டு, ஒரு சின்ன நடை போடலாம், குதிக்கலாம். இவைகள் உடலின் இரத்த ஓட்டம் சிறப்பாக செயல்பட உதவும். ஒவ்வொரு முறையும் படிக்க அமரும் முன் முகம், கை, கால்களைக் கழுவித் துடைத்துவிட்டுச் செல்ல வேண்டும். இதுவும் உடலுக்கும் மூளைக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும். அப்போது நரம்பு மண்டலங்கள் உற்சாகமடையும். மன ஒருமைப்பாடு, நினைவுத் திறன் கூடும். தேர்வு நேரத்தில் இப்படி நேரத்தை வீணாக்கலாமா என்று தோன்றலாம். நாம் செலவு செய்யும் இந்த சில நிமிடங்கள் நிச்சயமாக படிக்கும் திறனை மேம்படுத்தும்.


**தேர்வு எழுதச் செல்லும் வேளையிலே:**

தேர்வு எழுதச் செல்லும் போது, பதட்டமும், இதயத்தின் படபடப்பும் கூடும். சிலருக்கு இந்த பதட்டம் கூடுதலாகவும், சிலருக்குக் குறைவாகவும் இருக்கலாம். எல்லாம் நன்றாக படித்து விட்டோமா? தெரிந்த கேள்விகள் வருமா? பதில் நன்றாக எழுத முடியுமா? மதிப்பெண்கள் என்னவாகுமோ? என்ற எண்ணங்கள் பொங்கும். இறைவன் மீது நம்பிக்கையுடன் உங்களது ஒரு காலையும், உங்கள் மீது நம்பிக்கையுடன் உங்களது மறுகாலையும் எடுத்து வைத்து உற்சாகத்தோடு தேர்வு அறைக்கு கம்பீரமாக செல்லுங்கள்.

எது வந்தாலும் வரட்டும் எதிர் கொள்வேன், வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். அப்போது யாவும் நல்லபடியாக நடக்கும். வெற்றி நிச்சயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது பாசமிகு தாயார் முதுமையில் இயலாமையில் இருந்தபோது அவரைத் தரிசித்து அவருக்கும் எமக்கும் ஆறுதல் வழங்கி தமது செபங்களில் அவரை இணைத்துக் கொண்ட அன்பு உள்ளங்களுக்கும், அவர் இறைபதம் அடைந்தபோது உடன்வந்து ஆறுதல் கூறி தமது அனுதாபங்களைத் தெரிவித்து, இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அருட் தந்தையர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கும், பத்திரிகை வாயிலாகவும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களுடாகவும், மலர் வளையங்களைச் சாத்தியும் அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் தம் துயரைப் பகிர்ந்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் இரங்கற் திருப்பலியை நிறைவேற்றிய அருட்தந்தையர்களுக்கும், இன்றைய 31ஆம் நாள் நினைவுத்திருப்பலியை நிறைவேற்றிய அருட்தந்தை அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும், நினைவுமலராக்கம் செய்தவர்களுக்கும், இதனை சிறப்புற அச்சிட்ட பதிப்பகத்தாருக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவிகளும், ஒத்தாசைகளும் நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றிகள்.



-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருட நினைவில்...



ஆசிரியரும், சமாதான நீதவானுமாகிய எம்மவர் தந்தை

## அமரர் மரியான் சூசைப்பிள்ளை

அவர்களது விண்ணக வாழ்வின்

## 30ஆவது ஆண்டு நினைவாக..

மண்ணில்
1926-04-14

விண்ணில்
1983-01-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org